மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 247/2021**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44 வது பிரிவு 5 ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சிவக்குமார், ஜீனியர் அசிஸ்டண்ட் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : செல்வமோகன் (பி.வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

07.08.2025

**முதல் விசாரணை –**

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. என் தரப்பு முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. 26.08.1942 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் தகப்பனார் வழி தாத்தா சண்முகசுந்தரம் பெயரில் உள்ள கிரைய ஆவண எண். 1643/1942 அசல் **பிவாசாஆ 1** ஆகும்.

2. 26.12.2020 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு அருப்புக்கோட்டை கோட்டாட்சியர் அனுப்பிய குறிப்பாணை அசல் **பிவாசாஆ 2** ஆகும்.

3. நாயனேந்தல் கிராமத்தில் வசிக்கும் மக்கள் எண்ணிக்கை பற்றி 1ம் பிரதிவாதிக்கு திருச்சுழி வட்டாட்சியரிடமிருந்து RTI மூலம் கிடைக்கப்பெற்ற தகவல் அசல் **பிவாசாஆ 3** ஆகும்.

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தபசில் சொத்திற்கு கிழமேல், தென்வடல் அளவுகள் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு கிழக்கே ரோடு உள்ளது என்றால் சரிதான், தெற்கே 2ம்வாதி ராதாகிருஷ்ணன் வீடு உள்ளது என்றால் சரிதான், மேற்கே 1ம் வாதி ராஜசேகர் வீடு உள்ளது என்றால் சரிதான், தாவா சொத்திற்கு வடக்கே சர்க்கார் புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் புறம்போக்கு

நிலம் இல்லை எனது சின்னதாத்தா கிருஷ்ணனின் காலி நிலம் உள்ளது. கிருஷ்ணனுக்கு 3 செண்ட் நிலம் உள்ளது. அதற்கு பட்டா உள்ளதா என்றால் இல்லை, மனு செய்துள்ளோம். எனக்கு 3 3/4 செண்ட் பாத்தியம் கேட்கிறேன் அதற்கும் பட்டா இல்லை மனு செய்துள்ளோம். பட்டா கேட்டு எப்போது மனு செய்துள்ளேன் என்றால் 2 வருடம் இருக்கும். பட்டா கேட்டு யாருக்கு மனு செய்தேன் என்றால் வருவாய் கோட்டாட்சியருக்கு மனு செய்தேன். வட்டாட்சியருக்கு மனு கொடுக்கவில்லை என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியர் எனது மனுவிற்கு ஏதேனும் பதில் கொடுத்தாரா என்றால் பதில் கொடுக்கவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)